உ

கடவுள் துணை.

# பெரிய நாயகியம்மன்

## பதிகம்.

இஃது.

தஞ்சாவூர்

**கன்னையசெட்டியாரால்**

அமரம்பேடு

**இரங்கசாமிமுதலியா**

ரவர்களது

பூமகள்விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

யுவ௵- வையாசி௴



சிவமயம்.

# பெரியநாயகியம்மன்பேரில்

## பதிகம்.

அரிபிரமாதிகடேடுதற்கரிய வன்னபூரணி சதா
நந்தி, யந்தரிகௌரி சுந்தரியகோரி யம்பிகைதுரந்த
ரிமாரி, திரிபுரதகனி மகிடசங்காரி தேவர்கள் பணிந்
தசிங்காரி, திங்கள்செஞ் சடைச்சி யிங்கிதநடைச்சி
செங்கல்வமீனுன செம்பட்ச்சி, சொருகுகொந் தளச்
சி யழகுகண்சுழிச்சி துர்க்கையாமளை துடியிடைச்சி,
தங்கமாமறைச்சி விபூதிருத்திராட்சி துரந்தரமான
செல்வாட்சி, மருமலர்சோலை வரநதிசூழும் வாழ்ந்தி
டும்வாலிமாநகரில், வாலிபூசித்த வாலிநாயகனை மரு
வியபெரியநாயகியே. (க)

என்னுடன்குறையை யுன்னுடன் சொன்னாலே
துதாமென்றுகேளாம,லெனக்குநீ தாயாருனக்குநா
னடிமை யித்தனை பராமுகமானால், பின்னையார்கேட்
பார் மோனமாயிருந்தார்பிள்ளையென் றென்னையே
பெற்றாய், பித்தனார்வாலிநாதனார்கேட்டால் பேய்ச்சி
யென் றுன்னையேநகைப்பார், தன்னுமேத யிளப்பமெ
ந்தனுக்கென்ன சர்வசீவன்களைக் காத்தாய், சற்றுக
ருணைபுரிந்தெனைக்களித்துத் தயையைவைத் தென்
னையாளம்மா, மன்னுமாமணியே வரநதி சூழும்வாழ்
ந்திடும் வாலிமாநகரில், வாலிபூசித்த வாலிநாயகனை
மருவியபெரியநாயகியே (உ)

எந்நாளுன்றனடைக்கலமானேனென்று நாளு
ஞ்செவிக்குரைக்க, வேழையென்னிடத்திலிருப்பது
விருதோவென்றனுலாவதேதுனக்குச், சிந்தையினி
னைந்தேயுன்பதந்தன்னைச் சிக்கெனப் பிடித்துநானி
ருக்க, தேலவிட்டிருந்தா லுனைவிடுவேனோ செப்புநீ
யெனக்கொருவார்த்தைப், பைந்தமிழோத நாவினி
ற்பஞ்சாட்சரத்தையே யகர்ந்திடுமெனக்குப், பத்தி
யாலுன்னையர்ச்சனைபுரிந்துபணிந்திடப்புத்திபோதா
து, வந்தெனையாளும் வரநதிசூழும்வாழ்ந்திடும்வாலி
மாநகரில், வாலிபூசித்த வாலிநாயகனை மருவியபெரி
யநாயகியே. ௩

நீரின்மேற் குமிழிபோலவிக்காய நிலமையேய
ன்றியோர்நிமிஷ, நேயமாமனையிற் குடியிருப்பதுவு
நிச்சயமல்லவேவாழ்வு, திருளவுனது கோயிலைநோக்
கித்தரிசனஞ்செய்யவே யென்றன், சென்ன சாகரத்
தைநீக்கியேபதவி சேர்த்திடநீசும்மாவிருந்தால், ஆ
னாராலேனுவே னென்றுநீ துணையென்றபயமிட்டலறி
யேபழுதால், ஆதரித்தழைத்துப் பயந்தனைத் தவிர்
த்தேயன்புவைத்தென்னையாளம்மா, மாரியேபொழி
லார்வரநதிசூழும் வாழ்ந்திடும்வாலிமாநகரில், வால்பூ
சித்தவாலிநாயகனை மருவியபெரியநாயகியே. (௪)

நெஞ்சினினினைக்கு நினைவுகேளாம னீதியோர
வுளக்கிஃதம்மா, நீங்கலாயிருந்தால் பிழைப்பதெப்
படிநா னிந்தனை யென்னசெய்வேதனே, பஞ்சையாய்
த்திரிந்து மனதுசஞ்சலமாய்ப் பலகலைநூல்தெரியா
மற், பாரினிலுழன்று பரவசமாகிப் பாததாமரையி
னைக்கானேன், வஞ்சனேவேண்டாமென்றனைப்போ
லே மைந்தனைப்பெற்றிடவில்லையோ, வாதுசெய்யாம
ற் றயலொலாந்திர்த்தே வரமளித் தென்னையாளம்மா,
வஞ்சியேயுமையே வராநதிசூழும் வாழ்ந்திடும் வாலி
மாநகரில், வாலிபூசித்தவாலிநாயகனை மருவியபெரி
யநாயகியே.

வயிறுசாணளவுவளர்க்கமாட்டான்மன்மனதினிற் கவலையானொந்து, வாடினேனித்தமுன்றனைத்தொழு துமௌனமாயிருந்துசேவிக்கத், தயிரிய மெனக்கே யளிப்பதுமில்லைத் தயையைநீபுரிவதுமில்லை, தயா ளமுமில்லை,யிரக்கமுமில்லை தருமநீயல்லவோதாயே துயரதுநீக்கி யாட்கொளாதிருந்தாற் றோஷமே வந் திடு முனக்குச், சொல்லறியாத வடியெனுக்கிரங்கித் துணையிருந்தென்னையாளம்மா, மகிடசங்காரிவரநதி சூழும் வாழ்ந்திடும்வாலிமாநகரில், வாலிபூசித்த வா லிநாயகனை மருவியபெரியநாயகியே. ௬

அன்னையிற்றினமு நீ துணையாகவாகூஷியா யிரு ந்துகொள்ளென்னை, யலைய விட்டிருந்தா லுனைவிடு வேனோ யடுக்குமோவுனக்கிஃதம்மா, வுண்டிலையென் றுசொல்வ தெங்நேர முன்மையேபேசுநீயம்மா,வுத் திரப்பிரிதி வுணர்த்திடாதிருந்தா லுனைத்தெய்வ மெ ன்றுநான் வணங்கேன், விண்டுபோகாமல் மனஞ்ச லியாமல் வெறுப்புவந்திடாமலேகாத்து, வேண்டின தெல்லாம் வரமெனக்களித்து விருப்பம்வைத்தென் னையாளம்மா, வண்டணிகுழலே வரநதிசூழும் வா ழ்ந்திடும்வாலிமாநகரில், வாலிபூசித்தவாலிநாயகனை மருவியபெரியநாயகியே. (௭)

தலைமுறையாக வடிமையென்றுனக்குச் சாதக
ம்பெழுதிநான்கொடுக்கச், சட்டைசெய்யாம லிருந்
தையேயானால் சபைதனிலேசுவே னுன்னை, நலமல
வுனக்கு ஞாயமாயிராது நாலுபேர் முன்பதா யிழுப்
ப்பேன், நானிலமறிய வேண்டுமோவுன்னை நகைத்தி
டப் பண்ணிவையாதே, யலைசடையாகி நோவிலே
மெலிந்தே னடியனைக்காப்பதுன்பார, மலதியைநீக்
கி கேட்டதுதந்தே யருள்புரிந் தென்னையாளம்மா,
வலுமையானவளே வாலிமாநகரில் வாலிபூசித்தமரு
வியபெரியநாயகியே ௮

சொல்வதுமுனையே துதிப்பதுமுனையே துயர
மாய்நோவதுமுனையே, துக்கம்வந்தடைந்தால்வைவ
துமுனையே சொற்பமாய்ப் பேசுவதுனையே, அல்லு
மேபகலு நினைப்பதுமுனையே யடிக்கடி யர்ச்சிப்பது
னையே, ஆதரியாமலிருப்பையேயானாலசங்கிதம்பண்
ணுவதுனையே, கல்லுமேகனாயு முன்மனங்கனாயா
திருப்பது மென்னகாரணமோ, கருமத்தை நீக்கிய
ருடனைக்கொடுத்துக் காட்சிதந் தென்னையாளம்மா,
வல்லியேயுமையே வரநதிசூழும் வாழ்ந்திடும் வாலி
மாநகரில், வாலிபூசித்த வாலிநாயகனை மருவியபெ
ரியநாயகியே. ௯

எண்டிசையெல்லாந் திரிந்தலைந்துழன்றேயி…
கலவந்தேங்கிநானிருக்க, வென்னுடை யுடம்பில்…
யாதிதந்தணுகி யெங்குமே படர்ந்த சங்கிதமா…
கண்டபேர்நகைக்கத் தலைகுனிந்திடவே கள்ள…
போலவேபதுங்கி, கல்வியுமறிவுங்கற்றவருறவுங்…
விலுமறிந்திடா திருந்தத், தொண்டன்மேற் கிரு…
வைத்தரும்பிணியைத் தொலைத்துவைத் தெல்…
யாளம்மா, தோத்திரமாகப்பத்துமேபதிகஞ் செ…
னதுன்செயலலோதாயே, மண்டலம்புகழும் வ…
சூழும்வாழ்ந்திடும் வாலிமாநகரில், வாலிபூசித்த…
விநாயகனை மருவியபெரியநாயகியே. (…

பெரியநாயகியம்மன்பேரில் பதிகம்

முற்றிற்று.